**செய்தி வெளியீடு எண்:122** **நாள்:14.02.2021**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 13.2.2021 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில், 2 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சேலம் மாவட்டம்–மகுடஞ்சாவடி, மதுரை மாவட்டம்–மதுரை காமராசர் பல்கலைக்கழகம், கிருஷ்ணகிரி மாவட்டம்–சூளகிரி, திருப்பத்தூர் மாவட்டம்–மாதனூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டம்–கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களிலுள்ள தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அவசரகால சிகிச்சை மையங்களை துவக்கி வைத்தார்கள். மேலும், மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் 62 கோடியே 97 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மருத்துவக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

விபத்து மற்றும் மருத்துவ அவசர காலங்களில் புறநகர் பகுதிகளிலிருந்து மக்கள் சிகிச்சைக்காக நகருக்குள் உள்ள மருத்துவமனைக்கு வரவேண்டியுள்ளது. இத்தருணங்களில் பாதிக்கப்பட்டவர்கள் உரிய மருத்துவமனையை சென்றடைய கால தாமதம் ஏற்படுகிறது. அவசர காலங்களில் பொன்னான நேரமான (Golden Hour) முதல் ஒரு மணி நேரத்திற்குள் பாதிக்கப்பட்டவருக்கு உரிய தரமான அவசர சிகிச்சை கிடைக்கப்பெற்றால், பாதிப்பின் தன்மை குறைவதோடு, உயிரிழப்பும் பெருமளவிற்கு தவிர்க்கப்படும். இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு, தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில், அதிக அவசரகால சேவை தேவைப்படும் பகுதிகளை கண்டறிந்து, அவசர சிகிச்சை மையங்களை நிறுவி வருகிறது. இத்தகைய அவசர சிகிச்சை மையங்கள் செங்கல்பட்டு மாவட்டம்–தாம்பரம் மற்றும் மாமல்லபுரம், சென்னை மாவட்டம் – ஈஞ்சம்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் – ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர் மாவட்டம்–பாடியநல்லூர், கடலூர் மாவட்டம்–வேப்பூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம்–கொடும்பாளூர் ஆகிய 7 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இந்த மையங்கள் மூலம் இதுவரை விபத்துகளினால் பாதிக்கப்பட்ட 61,917 நபர்கள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக, சேலம் மாவட்டம்–மகுடஞ்சாவடி, மதுரை மாவட்டம்–மதுரை காமராசர் பல்கலைக்கழகம், கிருஷ்ணகிரி மாவட்டம்–சூளகிரி, திருப்பத்தூர்

மாவட்டம்–மாதனூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டம்–கும்மிடிப்பூண்டி ஆகிய 5 இடங்களில் சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து 2 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள அவசரகால சிகிச்சை மையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த மையங்களில், சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்படுவர். மூன்று படுக்கைகள் வசதி கொண்ட இம்மையங்களில், ஒரு மருத்துவர் மற்றும் செவிலியர் 24 மணி நேர அவசரகால சிகிச்சையை அளிப்பார்கள். இம்மையங்களில் வெண்டிலேட்டர், டெஃபிபிரில்லேடர் போன்ற உயரிய உயிர் காக்கும் கருவிகள் மற்றும் மருந்துகள் உள்ளன.

மேலும், மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில் 21 கோடியே 66 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள முதுநிலை மருத்துவ மாணவ, மாணவியருக்கான கூடுதல் விடுதிக் கட்டடங்கள், 10 கோடியே 34 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கல்வியியல் கூடம், ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கான கூடுதல் குடியிருப்புக் கட்டடம், 17 கோடியே 72 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள எம்.பி.பி.எஸ். மாணவ, மாணவியருக்கான கூடுதல் விடுதிக் கட்டடங்கள், 8 கோடியே 62 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நூலகக் கட்டடம், 1 கோடியே 74 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள விலங்குகள் கூடம் மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் 2 கோடியே 88 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நெஞ்சக பிரிவுக் கட்டடம், என மொத்தம் 62 கோடியே 97 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மருத்துவக் கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர்.பி.உதயகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்

துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ். கே. பிரபாகர், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்ட இயக்குநர் திரு. ஏ. சிவஞானம், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் ஆர். நாராயணபாபு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**